வாசிக்க : ரோமர் 9:22-28

***"நானே வழியும், வாய்மையும், வாழ்வுமாய் இருக்கிறேன்" (யோ 14:6)***

கடவுளால் மீட்படைந்து, சொர்க்கத்தில் என்றென்றும் ஆனந்தமாய் அவருடன் வாழ்வது யாருக்குத்தான் பிடிக்காது ? இவ்வுலகில் வாழும் காலமெல்லாம் இறைவனின் அரவணைப்பு, கவனிப்பு, விசாரிப்பு. இவற்றை விரும்பாதவர் யார் ? அப்படியானால் மீட்படைய வழி என்ன ?

முதலாவது, நாம் நமது உண்மையான நிலையை ஒத்துக்கொள்ளவேண்டும் (**Accept**). நம்மை நல்லவர்களென நினைக்கத் தூண்டும் நமது சில நற்குணங்களும், நற்செயல்களுமே நமது மீட்புக்குப் பெருந்தடையாய் உள்ளன. நமது நீதிகளெல்லாம் கடவுளுக்குமுன் அழுக்கான கந்தைபோல உள்ளன (ஏசா 64:6). ஒரு வேளை வெளிப்படையான தீயசெயல்கள் நம்மிடம் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் மனிதனின் "இருதயத்திலிருந்துதான்" பொல்லாத சிந்தனைகள், பொருளாசை, பொறாமை, பெருமை முதலானவை வெளிவருகின்றன (மாற் 7:21,22). நாம் அனைவரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துவிட்டோம் (ரோ 3:23). நாம் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, மனிதர் அனைவரும் கடவுளுக்குமுன் பாவிகளே! இயேசுவைப் பெற்றெடுத்த மரியாளே அவரைத் தனது "இரட்சகர்" என்று அழைத்தார் (லூக் 1:47).

இரண்டாவது, நமது பாவத்திற்குப் பரிகாரி இயேசு கிறிஸ்துதான் என்று நம்பி (**Believe**), அவரைச் சொந்த மீட்பராக ஏற்றுக்கொள்ளவேண்டும் (அப் 16:31). பாவம் செய்ததால் நாம் கடவுளுக்கு விரோதிகளானோம். நம்மையும் கடவுளையும் ஒப்புரவாக்க இயேசு கிறிஸ்து நடுவராக வந்தார். கல்வாரியின் கொடூரச் சிலுவையில் நமது பாவங்களைச் சுமந்து, நமது அக்கிரமத்துக்காய்த் தண்டிக்கப்பட்டு தமது உயிரையே நமக்காக ஈந்தார் (1 பேது 2:24,25). மாசற்ற அவரது இரத்தம் எல்லாப் பாவங்களையும் நீக்கி நம்மைத் தூய்மைப்படுத்தும் (1 யோ 1:7).

மூன்றாவது, நமது உள்ளத்தின் நம்பிக்கையை அறிக்கையிடவேண்டும் (**Confess**). "இயேசுவே ஆண்டவர்" என வாயார அறிக்கையிட்டு, நமது உள்ளத்தில் நம்பினால் மீட்பு பெறுவோம் (ரோ 10:9). இந்த வாயின் அறிக்கைக்கும், கடவுளுக்குக் கீழ்ப்படிதலுக்கும் அடையாளமாகத்தான் திருமுழுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது (1 பேது 3:21). "நம்பிக்கையுள்ளவனாகி, திருமுழுக்கு பெறுபவன் மீட்படைவான்" (மாற் 16:16).

பிரியமானவரே, நீங்கள் மீட்படைய விரும்பினால், "இறைவா, நான் ஒரு பாவி! என்மீது இரங்கியருளும். இயேசுவை என் மீட்பராக ஏற்றுக்கொள்கிறேன்" எனப் பிரார்த்தியுங்கள். அவர் இப்பொழுதே உங்களைத் தம் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளுவார்.

*வா, பாவீ, மலைத்து நில்லாதே வா!*
*என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென் றெண்ணித் திகையாதே;*
*உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே, உள்ளபடி வாவேன்! (கீர்த்தனை)*

*—தேவசகாயம் உபாத்தியாயர், சாட்சியாபுரம்*